


# துபாயில் ‘மானுட வசந்தம்’

**• முதுவை ஹிதாயத்துல்லாஹ்**

துபாய் ஈமான் அமைப்பு நடத்திய மானுட வசந்தம் நிகழ்ச்சியில் டாக்டர் K.V.S. ஹபீப் முஹம்மது பங்கேற்று இஸ்லாம் குறித்த கேள்விகளுக்குப் பதில் அளித்தார்.

துபாய் ஈமான் அமைப்பு மானுட வசந்தம் நிகழ்ச்சியை 27.02.2009 வெள்ளிக்கிழமை மாலை இந்திய கன்சுலேட் அரங்கில் நடத்தியது.

மானுடவசந்தம் நிகழ்ச்சிக்கு ஈமான் அமைப்பின் தலைவர் செய்யது எம். ஸலாஹுத்தீன் தலைமை வகித்தார். ஹாபிஸ் முஹம்மது இப்ராஹீம் இறை வசனங்களையும், ஈமான் விழாக்குழு செயலாளர் காயல் யஹ்யா முஹ்யித்தீன் அதன் தமிழ் மொழியாக்கத்தையும் படித்தார். ஈமான் அமைப்பின் பொதுச் செயலாளர் ஏ. லியாக்கத் அலி வரவேற்புரை நிகழ்த்தினார்.

ஈமான் அமைப்பின் துணைத்தலைவர் எம்.அப்துர் ரஹ்மான் துவக்கவுரை நிகழ்த்தினார். அவர் தனது உரையில், மானுட வசந்தம் நிகழ்ச்சி துபாயிலும் ஈமான் அமைப்பின் சார்பில் நடத்தப்பட்டு சகோதர சமுதாய மக்கள் இஸ்லாம் குறித்த தங்களது ஐயப்பாடுகளுக்கு உரிய விளக்கங்களை டாக்டர் K.V.S. ஹபீப் முஹம்மது அவர்கள் மூலம் பெற வேண்டும் என ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. நாம் பல்வேறு மதங்களைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் மனங்களால் ஒத்தவர்கள். மனிதநேயத்தை வலியுறுத்தாத சமுதாயம் இல்லை. இதனைப் புரிந்து கொண்டு நாம் அனைவரும் ஒரு குடும்பமாக இணைந்து செயல்பட இந்நிகழ்ச்சி பெரிதும் உதவும் என்ற நன்னோக்கில் இந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்துள்ளோம் என்றார்.

ஈமான் அமைப்பின் கல்விக்குழுத்தலைவர் B.S.M. ஹபீபுல்லாஹ், இந்து சமுதாயத்தின் பிரதிநிதியாக வெங்கடாச்சலம் ராமசாமி குருக்கள், கிறிஸ்தவ சமுதாயத்தின் சார்பாக அருட்தந்தை பால் ரிச்சர்ட் ஜோசப் உள்ளிட்டோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.

பி.எஸ்.எம். ஹபீபுல்லாஹ் தமது வாழ்த்துரையில் டாக்டர் கே.வி.எஸ். அவர்களை தொலைக்காட்சி மூலம் பார்த்து வந்த நான் இன்று நேரில் பார்க்கும் வாய்ப்பு கிடைத்துள்ளது. இன்றைக்குச் சமுதாயத்தில் வரதட்சணை ஒரு முக்கியப் பிரச்னையாக இருந்து வருகிறது. நம்மிடையே உள்ள நல்லிணக்கம் மறைந்து கலவரமும் வெறியும் தோன்றக் காரணம் என்ன என்பதை டாக்டர் அவர்கள் தமது கேள்வி பதில் நிகழ்ச்சியில் தெளிவுபடுத்த வேண்டும் எனக் கேட்டுக் கொள்வதாகக் குறிப்பிட்டார்.

வெங்கடாச்சலம் ராமசாமி குருக்கள் தமது உரையில், மானிடப்பிறவியானது ஆண், பெண் என இரு சாதிகளைக் கொண்டது. மானிட வர்க்க உயர்வுக்கு இயற்கையின் மீது பிரியம் கொள்ள வேண்டும். மனிதனால் கண்டறியமுடியாத ஒரு சூப்பர் சக்தியே கடவுள். மார்க்கங்கள் பலவாக இருந்தாலும் நோக்கம் யாவும் ஒன்றே. இன்றைக்கு ஏற்பட்டுள்ள பொருளாதார மந்தநிலை குறித்து கவலை கொள்ளாது உறுதியான நம்பிக்கையுடன் இறைவனைப் பிரார்த்தித்து கடினமாக உழைத்தால் நல்ல மாற்றங்கள் ஏற்படும்.

உங்கள் வாழ்வில் வசந்தம் ஏற்பட இந்த மானுட வசந்தம் நமக்கு உதவும் என்பதில் ஐயமில்லை என்றார்.

அருட்தந்தை பால் ரிச்சர்ட் ஜோசப் மனிதநேயக் கருத்துகளை வழங்கி வரும் மானுட வசந்தம் டாக்டர் K.V.S. ஹபீப் முஹம்மது அவர்களுக்கும், இத்தகைய நிகழ்வுக்கு ஏற்பாடு செய்த ஈமான் சங்கத்தினருக்கும் வாழ்த்து தெரிவித்தார். சிறப்பு விருந்தினர்களுக்கு B.S.M. ஹபீபுல்லாஹ், எம். அப்துல் கத்தீம், ஏ. அஹமது முஹைதீன், எம்.அக்பர் கான், சம்சுதீன் காக்கா உள்ளிட்டோர் நினைவுப் பரிசுகளை வழங்கினர்.

ஈமான் அமைப்பின் தலைவர் செய்யது எம். ஸலாஹுத்தீன் அவர்கள் டாக்டர் K.V.S. ஹபீப் முஹம்மது அவர்களுக்கு நினைவுப் பரிசை வழங்கி கௌரவித்தார். தமது வாழ்த்துரையில் இறைவன் மனிதனுக்குப் பணத்தை வழங்கியதும் அவனைப் புகழ்கிறான். ஆனால் வசதிக்குறைவாகப் படைத்ததும் அவனை இகழ்கிறான். எனவே பணம் இறைவனிடமிருந்து வந்த ஒரு சோதனைப் பொருள் என்பதை உணர்ந்து வாழ வேண்டியதன் அவசியத்தை இரத்தினச் சுருக்கமாக எடுத்துரைத்தார்.

மானுட வசந்தம் நிகழ்ச்சியின் நெறியாளர் டாக்டர் கே.வி.எஸ்.ஹபீப் முஹம்மது அவர்கள் மானுட வசந்தம் நிகழ்ச்சி குறித்தும், அதன் நோக்கம் குறித்தும் விவரித்தார். துபாய் ஈமான் அமைப்பினர் இந்தியச் சமுதாயத்தினருக்காகப் பல்வேறு கல்வி, சமுதாய மேம்பாட்டுப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். அவர்களது தன்னலமில்லாத பணிகளைப் பாராட்டி வாழ்த்துவதோடு பிரார்த்திக்கிறேன்.

பிரவாசி என்றால் வெளிநாடு வாழ் இந்தியர். வெளிநாடு வாழ் இந்தியர்களது முதலீட்டைக் கவர மாநாடு நடத்துகிறார்கள் எனில் அங்கு ஜனாதிபதியும் இருப்பார். பிரதமரும் இருப்பார். இதிலிருந்து வெளிநாடு வாழ் இந்தியர்களின் முக்கியத்துவத்தை உணரலாம். பிறந்த நாட்டுக்காகவும், புகுந்த நாட்டுக்காகவும் தங்களது உன்னதமான உழைப்பினை அளித்து வரும் உங்களைப் பாராட்டுகிறேன். இந்திய நாட்டின் வளர்ச்சியில் நீங்கள் காட்டி வரும் அக்கறை தொடர வாழ்த்துகிறேன்.

குருக்கள் அவர்கள் தமது பாலக்காட்டுத் தமிழிலே பொருளாதாரப் பின்னடைவு குறித்து குறிப்பிட்டார்கள். பொருளாதார நிபுணர்கள் இதுகுறித்து ஆய்வு செய்து இந்நிலைக்குக் காரணம் என்ன என்பதனைக் கூறவேண்டியது அவர்களது கடமையாகும்.

## அபுதாபியில்...




அபுதாபி அய்மான் சங்கம் மானுட வசந்தம் நிகழ்ச்சியை ஹம்தான் சாலை ருசி பாங்வெட் ஹாலில் 28.02.09 அன்று நடத்தியது. அய்மான் துணைத்தலைவர் அதிரை சாஹுல் ஹமீது தலைமையேற்று நடத்திய இந்த நிகழ்வில், K.V.S. ஹபீப் முஹம்மத் அவர்கள் 'முஸ்லிம் சமுதாயம் எதிர் நோக்கும் பிரச்னைகள்' என்ற தலைப்பில் பேருரை ஆற்றினார்கள். சிறப்புரைக்குப் பின்னர் மக்களின் ஐயங்களுக்கு நேர்த்தியாகப் பதிலளித்தார்

பல்வேறு அமைப்பின் பிரதிநிதிகளும், ஊர் ஜமாஅத்தின் பிரதிநிதிகளும், தாய்மார்களும் அலுவல் நாள் என்று கூட பார்க்காமல், ஆர்வத்தோடு டாக்டரின் உரை கேட்க திரண்டிருந்தனர். முன்னதாக அய்மான் சங்கப் பொதுச்செயலாளர் S.A.C. ஹமீது வரவேற்புரையாற்றினார். அய்மான் கல்லூரித் தலைவர் ஷம்சுத்தீன் ஹாஜி முன்னிலை வகித்து, டாக்டர் கேவிஎஸ் அவர்களுக்குப் பொன்னாடை போர்த்தி கவுரவித்தார். இறுதியாக அய்மான் நிர்வாகச் செயலாளர் இக்பால் அவர்கள் நன்றி நவின்றார்.

## மஸ்கட்டில் 'மானுட வசந்தம்'




ஓமன் நாட்டின் தலைநகர் மஸ்கட்டில் டாக்டர் K.V.S. ஹபீப் முஹம்மது பங்குபெற்ற மானுட வசந்தம் நிகழ்ச்சி 05.03.2009 வியாழக்கிழமை மாலை அல் மாஸா ஹாலில் நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சிக்கு ஃபஸல் தலைமை தாங்கினார். டாக்டர் கே.வி.எஸ். ஹபீப் முஹம்மது அவர்கள் இஸ்லாம் குறித்த சந்தேகங்களுக்கு அறிவுப்பூர்வமான பதில்களை வழங்கினார்.

மிகக் குறுகிய கால அளவில் ஏற்பாடு செய்யப்பட்ட இந்நிகழ்வில் இஸ்லாமிய சகோதர, சகோதரிகள் மட்டுமல்லாது சகோதர சமுதாயத்தினரும் 400 க்கும் மேற்பட்டோர் பங்கு பெற்று தங்களது ஐயங்களுக்கு விளக்கம் பெற்றுச் சென்றனர். அப்துர் ரவூஃப் நிகழ்ச்சியின் ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட்டார்.

மோதல்கள் ஏன் ஏற்படுகின்றன. நமக்குள் பேசிக் கொள்ளாததன் காரணமாகவே ஏற்படுகின்றன. கண வன் மனைவியுடனும், தகப்பன் பிள்ளையுடனும், ஒரு சமுதாயம் இன்னொரு சமுதாயத்துடனும் பேசிக் கொண்டால் பிரச்னை, தீர்க்கப்படும்.

கணவன், மனைவி எப்பொழுது பேசுகின்றனர் என்றால் தொலைக்காட்சித் தொடரின் போது கமர் ஷியல் பிரேக் விடும் போது தான் பேசுகின்றனர். கண வன், மனைவி இருவரும் பணிக்குச் செல்கின்றனர். இதனால் பிள்ளைகளுடன் பேசுவதற்கான நேரம் கிடைப்பதில்லை.

மானுட வசந்தம் நிகழ்ச்சியின் நோக்கமே ஒரு வரை ஒருவர் புரிந்து கொண்டு செயல்பட வேண்டிய தன் அவசியத்தை வலியுறுத்துவதுதான். எனவே ஈகோ வைக் களைந்து விட்டு ஒருவருக்கொருவர் மனம் விட்டுப் பேச வேண்டும்.

இங்கே என்ன நிகழ்கிறதென்றால் கலவரத்திற்குப் பின்னர்தான் இரு சமுதாயத்தவர் பேசுகின்றனர். அதற்கு முன்னரே இவர்கள் பேசியிருந்தால் இது போன்ற நிகழ்வுகள் தடுக்கப்பட்டிருக்கும்.

மனிதனுக்குத் தேவை வாழ்வாதாரமும், வழிகாட்டு நெறியும். எந்த மனிதனும் கோட்பாடு இல் லாமல் வாழமுடியாது. மனிதனைப் படைத்த இறைவன் அவன் நிம்மதியாக வாழவேண்டும் அதன் மூலம் மனித சமுதாயம் நேர்வழி பெற வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில் முதல் மனித ராகிய ஆதத்தையே முதல் தூதராக ஆக்கியருளி னான்.

இஸ்லாம் என்றால் அமைதி. இதனைப் பின்பற்றி னால் நேர்வழி கிடைக்கும். ஒரு மனிதனுக்கு அமைதி கிடைத்தால் உலகில் அவனுக்கு அதை விட மிகப் பெரிய சொத்து எதுவும் இருக்க முடியாது.

செல்வர்களை விட அன்றாடங்காய்ச்சியாக இருக் கக்கூடியவன் படுத்தவுடன் நிம்மதியாக உறங்கிவிடு கிறான். இஸ்லாத்தைப் பின்பற்றினால் மனிதனுக்கு அமைதி கிடைக்கும் என இறைவன் வாக்களிக் கிறான். சில கோட்பாடுகளில் தனிமனித அமைதி குறித்தும், சிலவற்றில் சமுதாய அமைதி குறித்தும் கூறுவார்கள். ஆனால் இஸ்லாம் இவ்விரண்டையும் போதிக்கிறது.

நெஞ்சுக்கு நீதி செலுத்த வேண்டும். ஆன்மாவுக் குத் தீங்கிழைத்தல் கூடாது. சமுதாய உணர்வுகளை, உரிமைகளைக் காயப்படுத்தக்கூடாது. அநீதிகள் ஒழிக் கப்பட வேண்டும்.

மானுட வசந்தம் நிகழ்ச்சி கடந்த ஒன்பது ஆண்டு களாக தொலைக்காட்சியின் வாயிலாக தமிழ் கூறும் நல்லுலகிற்கு மனிதநேயக் கருத்துகளை வழங்கி வருகிறது. அமைதி பெறுக! அமைதி தருக! எனக்கூறி, நேயர்கள் கேட்ட கேள்விகளுக்கு விரிவான, விளக்க மான பதிலை வழங்கினார் டாக்டர் K.V.S. ஹபீப் முஹம்மது.

ஈமான் அமைப்பின் ஊடகத்துறை ஒருங்கிணைப் பாளர் முதுவை ஹிதாயத் நன்றி கூறினார். விழாவிற் கான ஏற்பாடுகளை ஈமான் அமைப்பின் நிர்வாகிகள் செய்திருந்தனர். இந்திய கன்சுலேட் அரங்கத்தில் 500க் கும் மேற்பட்டோர் குழுமியிருந்தனர். பெண்களும் அதிக அளவில் ஆர்வமுடன் வந்திருந்தனர். பலர் இடம் கிடைக்காமல் திரும்பிச்சென்றனர்.

சக்தி FM வானொலி, ஆசியாநெட் வானொலி, தட்ஸ்தமிழ்.காம், தினமலர் வெளிநாட்டு வாழ் இந்தி யர் செய்திகள், அதிகாலை.காம், ஈமான் டைம்ஸ் கூகுள் குரூப், முதுவை விஷன்.காம், காயல்பட்ட ணம்.காம்.காயல்பட்டணம்.இன், தனிநபர் வலைத் தளங்கள் போன்றவை மூலம் மக்களுக்கு செய்தி கள் அதிக அளவில் சென்றடைந்ததும் இதற்குக் காரணம். ●

இறைவனின் திருப்பெயரால்...

**Peace India Karate School**

**தற்காப்புப் பயிற்சி**

● 1Year Camp Rs.12,000 ● 6 Months Camp Rs.6,000
● 3 Months Camp Rs. 3,000●1Months Camp Rs.1,000
● 15 Days Camp Rs. 500 ● 1 Day Camp Rs. 200

*6 Months VIP's பர்சனல் பாடிகார்டு பயிற்சி*

(தங்கிப் படிக்க விடுதி வசதி உண்டு.)

**பிளாக் பெல்ட் ஆசிரியர்கள் தேவை**



இஸ்லாமிய முறையில் வணங் கும் முறை. டோர்னமெண்ட் & ஸ்டேஜில் ஏறலாம்.

குடும்பப் பெண்கள், மாணவ – மாணவிகள், வேலைக்குச் செல்லும்சகோதர – சகோதரிகள், சமூக விரோதிகளால் தாக்கப் படும் போது எவ்வாறு தம்மைத் தற்காத்துக் கொள்வது?

**மாஸ்டர் M.A. முஹம்மது ரபி B.Com, DFT. Black Belt**

**மிஸ் இந்தியா தையல் பள்ளி**

553 / 318, P.H. ரோடு, அமைந்தகரை மார்க்கெட் எதிரில், சென்னை - 29. கைப்பேசி : **98412 21246.**